Registered as a Newspaper

மினி ரேட்ஸ் சென்ரர்
T.V. றேடியோ, விடியோ, டெக் உதிரிப்பாகங்கள்
I. C. ரான்ஸிஸ்டர் விற்பனையாளர்கள்
No. 3, J. M. C. கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ. 1-50

மினி ரேட்ஸ் சென்ரர்
100",150", 300" திரையுடன் கலர் வீடியோ
சினிமா புரஜெக்டர் [ National Pan sonic ]
ஓடருக்கு எடுத்துக் கொடுக்கப்படும்
No. 3 J. M. C கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

சுடர்: 3 யாழ்ப்பாணம் பிரபவ ஞு மாசி மீ 25 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1408 றஜபு பிறை 18 (08 - 03 - 1988) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:22

### எரிபொருள் விலை ஏற்றம்

யாழ்ப்பாணம், மார்ச் 8

யாழ் நகரில் எரிபொருள்களின் விலை 'கிடுகிடு'என்று ஏறிக்கொண்டிருக்கிறது

பெற்ரோல் லீற்றர் 20 ரூபாவாகவும், டீசல் லீற்றர் 18ரூபாவாகவும், மண்ணெண்ணெய் லீற்றர் 9- ரூபாவாகவும் நேற்றுயாழ் நகரில் விற்பனை செய்யப்பட்டன. (ஒ-10)

### அகமது லெப்பை சுட்டுக் கொலை

கொழும்பு, மார்ச் 8

காத்தான்குடி பட்டின சபையின் முன்னாள் தலைவர் ஜனாப் அகமது லெப்பை கடந்த ஞாயிறு இரவு இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பள்ளிவாசலில் தொழுகையை முடித்துக் கொண்டு வீடு திரும்பும் சமயத்தில் ஜனாப் அகமது லெப்பை சுடப்பட்டார். மதசார்பற்ற கொள்கைக்காக ஜனாப். அகமது லெப்பை தமிழ், முஸ்லிம் மக்களினால் பெரிதும் பாராட்டப்பட்டு வந்தார் என்று கூறப்படுகிறது (ஒ-எ)

### சுப நேரம்

08 - 03 - 1988
மாசி 25
செவ்வாய்க்கிழமை
சுபநேரம்: 10 54 முதல் 12 24 வரை
ராகுகாலம்; 3.24 முதல் 4.54 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

★ தேடுதலை நிறுத்துக ★ உடனடி யுத்த நிறுத்தம் கொண்டுவருக

# இந்திய அரசும் புலிகளும் நிபந்தனையின்றி பேச வேண்டும்

## ஈரோஸ் பாலகுமார் தெரிவிக்கும் யோசனை இது

—அலுவலகச் செய்தியாளர்: அகில்ராஜ்—

யாழ்ப்பாணம், மார்ச் 8

இந்திய அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகளும் இருதரப்பிலும் எவ்வித நிபந்தனையுமின்றிப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். அப்போது தான் இரு சாராருக்கும் இடையிலான இடைவெளியை நீக்கி ஒரு சமரசத்துக்கு வரமுடியும்.

இவ்வாறு ஈரோஸ் இயக்கத்தின் பிரமுகரான திரு. வேலுப்பிள்ளை பாலகுமார் உதயனுக்கு அளித்த விசேட பேட்டி ஒன்றின்போது தெரிவித்தார்.

இரு தரப்பாரும் நிபந்தனை எதுவும் விதிக்காத நிலையில் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் எனத் தாம் இரு சாராரிடமும் வற்புறுத்தியிருப்பதாகவும் திரு பாலகுமார் கூறினர்.

உதயனுக்கு அளித்த பேட்டியில் அவர் தெரிவித்ததாவது:-

★ ஆயுதங்களைப் பெறல் என்ற போர்வையில் ஒரு தலைப்பட்சமாக நடைபெறுகின்ற தேடுதல் நடவடிக்கை நிறுத்தப்படவேண்டும்.

★ யுத்த நிறுத்தம் உடனடியாக அமுல் படுத்தப்பட வேண்டும்.

இதன் பின்னர் இந்திய அரசு விடுதலைப் புலிகளுடனும் விடுதலைப் புலிகள் இந்திய அரசுடனும் நிபந்தனையற்ற முறையில் பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டும்.

தற்பொழுது மிகவும் சிக்கலாகி உள்ள இந்திய அமைதிப்படையினர்—விடுதலைப் புலிகள் மோதல், தமிழ்பேசும் மக்கள் மத்தியில மிகுந்த மனக்கவலையை உண்டாக்கி உள்ளது.

எனவே இந்திய அரசுடன் விடுதலைப் புலிகளும், விடுதலைப் புலிகள் இந்திய அரசுடனும் நிபந்தனையற்ற முறையில் பேசிப் பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டும்.

(4ஆம் பக்கம் பார்க்க)

### எம். ஜி. ஆரின் இடத்தில் ராஜீவ்!

சென்னை, மார்ச் 7

தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் எம் ஜி ஆரின் படம் அகற்றப்பட்டு அந்த இடத்தில் பிரதமர் ராஜீவின் படம் தொங்கவிடப்பட்டது

கோட்டையில் நெடுஞ்செழியன் நிதியமைச்சராகப் பணியாற்றிய அறையிலேயே இந்த மாற்றம் இடம் பெற்றிருக்கிறது

நெடுஞ்செழியன் பணிபுரிந்த அறையில் இப்பொழுது கவர்னர் திரு. அலெக்சாண்டரின் ஆலோசகர் திரு. சித்து கடமையாற்றுகிறார். (ஒ-உ)

### முச்சந்தி முனி



இரண்டு பேரும் கூட்டாளியளாய் இருந்தவை தானே, அவர் இல்லாத வேளையில் இவருக்கு இடம் கொடுத்தால் என்னெண்டு சிம்பிளாய் நினைச்சிட்டாரோ சித்து...!

### இதுவரை 386 பேர் மரணம்

புதுடில்லி, மார்ச் 8

இலங்கையில் அமைதிப் படையைச் சேர்ந்த 386 பேர் இதுவரை கொல்லப்பட்டனர்; 1,250 பேர் காயமடைந்தனர்.

பாதுகாப்பு அமைச்சர் கே. சி பந்த் முன்கண்டவாறு லோகசபையில் நேற்றுத் தெரிவித்தார்

தீவிரவாதிகள் 163 பேர் இந்திய அமைதிப் படையிடம் சரணடைந்தனர். 3,898 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் பெரும்பெரும்பாலோர் விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

இப்படி பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்தார். (ஒ-எ)

### சர்வதேச பெண்கள் தினம்

கொழும்பு மார்ச் 8

சர்வதேசப் பெண்கள் தினம் இன்று குருணாகலில் இது சம்பந்தமான கொண்டாட்டத்தை நடத்த மகளிர் விவகார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது,

இக் கொண்டாட்டத்தில் பிரதம அதிதியாக ஜனாதிபதி ஜெயவர்த்தன கலந்து கொள்வார். (ஒ-எ)

### எல்லாவற்றுக்கும் ஜே. வி. பியினரை குற்றம் சாட்டமுடியாது

#### லலித் சொல்கிறார் இப்படி

கொழும்பு, மார்ச் 8

என்ன இடம்பெற்றாலும் ஜே. வி. பியைக் குற்றம் சாட்டுவது இன்று வழக்கமாகிவிட்டது. எல்லாவற்றுக்கும் ஜே வி பியினரைக் குற்றம் சாட்டமுடியாது

தேசியப் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி ஐ தே க காரியக் கமிட்டிக் கூட்டத்தில் பேசுகையில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது:

மருதானை பஸ்நிலையத்தில் குண்டு வெடித்து நூற்றுக்கணக்கானோர் இறந்தனர் அப்போது சிலர் என்னைச் சந்தித்து இதற்கு ஜே. வி. பியே பொறுப்பு என்று என்னைக் கூறும்படி கேட்டனர்.

நான் மறுத்தேன் விடுதலைப் புலிகள் தான் பொறுப்பு என்று கூறினேன். உண்மைக்கு நம் மதிப்பளிக்கவேண்டும்" —இப்படி அமைச்சர் சென்னார். (சி-எ)

### முப்பது சிப்பாய்கள் வெளியேற்றம்

கொழும்பு. மார்ச் 8

சிங்கள தீவிரவாத இயக்கங்களுடன் தொடர்பு கொண்டிருந்தவர்கள் என்று கருதப்பட்ட முப்பது சிப்பாய்கள் இலங்கை இராணுவத்தில் இருந்து வெளியேற்றப்பட்டனர்.

அப்படி வெளியேற்றப்பட்டவர்களில் சிலர் மேல் விசாரணைக்காக இரகசியப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அவர்களுக்கு எதிராக உறுதியான சந்தேகம் இருப்பதாக சாட்சியங்கள் தெரிவிப்பதாக இரகசியப் பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனிடையில் கொத்தலாவலை பாதுகாப்பு அக்கடமித் தாக்குதல் சம்பவம் தொடர்பாக கைதான இரண்டு இராணுவச் சிப்பாய்கள் விரைவில் இராணுவ விசாரணைக்கு உட்படுத்தப்படுவர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-எ)

# புதிய அணுகுமுறைக்கு இந்தியா தயாராகிறதா?

கொழும்பு, மார்ச் 8

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை அரசியல் தேசிய நீரோட்டத்துக்குக் கொண்டுவரக்கூடியதான புதிய அணுகுமுறையைக் கடைப்பிடிக்க புதுடில்லி அரசு தற்போது எண்ணியிருப்பதாகத் தெரிகின்றது.

இது குறித்து கொழும்பில் இருந்து வெளியாகும் ஆங்கிலத் தினசரியான 'த ஐலண்ட்' சில புதிய தகவல்களை வெளியிட்டுள்ளது

அந்தத் தகவல்களின் பிரகாரம்—

இந்தியத் தூதர் டிக்ஸிற் புதுடில்லி சென்றிருப்பதைத் தொடர்ந்து, புதுடில்லியின் புதிய அணுகுமுறை பற்றிய தகவல்கள் வெளிவரத் தொடங்கியுள்ளன

தற்போதைய மாகாண சபை முறையிலான அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தில் உள்ள குறைபாடுகளைத் திருத்திக் கொள்வது முதலாவது உத்தியாகும்

இதுசம்பந்தமாக இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும் முன்னர் வடக்கு கிழக்கு மாகாணசபைக்கான தேர்தல்களில் போட்டியிட தமிழர் தரப்பில் பொதுவேட்பாளர் பட்டியல் ஒன்றைத் தயாரிக்கவேண்டும்.

#### புலிகளுக்கு முதலிடம்

புதிய திட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கு முதலிடம் அளிக்கப்படும்.

அதற்கு முன் நிபந்தனையாக, ஆயுதங்களை இந்தியாவிடம் கையளிப்போம் என்று புலிகள் தலைவர் திரு பிரபாகரன் உறுதியான உத்தரவாதம் ஒன்றை இந்தியாவுக்கு வழங்க வேண்டும்.

இந்த ஆயுத ஒப்படைப்புக்கான தெளிவாகத் தயாரிக்கப்பட்ட கால அட்டவணை (Time-Table) ஒன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

புதுடில்லி, கொழும்பு அரசுகள் கொண்டுள்ள சந்தேகத்தை நிவர்த்தி செய்வதே இதன் நோக்கமாகும்.

#### பொதுமக்கள் கருத்து

இரண்டாவது புலிகளுடன் பேச்சுக்களை இந்தியா ஆரம்பிக்க வேண்டும் என்ற அபிப்பிராயம் பொதுமக்கள் மத்தியில் அதிகரித்து வருவதே

அண்மையர் முன்னணியின் உண்ணாவிரதத்தையும் இதன் ஒரு பகுதியாக இந்திய வட்டாரங்கள் கருதுகின்றன.

இதனைப் பாவிட்டால் புதிய பிரச்சினைகள் உருவாகலாம் என்று இந்திய தரப்பினர் உணருகின்றனர்.

இந்திய அதிகாரிகள் பிரசைகள் மட்டத்தில் நடத்திய ஆய்வின்படி, விடுதலைப் புலிகளுக்கும் இந்தியாவுக்கும் இடையே சமாதானம் நிலவினால், அமைதிப் படை வெளியேற வேண்டும் என்ற கோரிக்கை

(4-ஆம் பக்கம் பார்க்க)

### நிவாரணம் பெற சமாதான நீதிவான் உறுதிப்படுத்தினால் போதும்

யாழ்ப்பாணம், மார்ச்8

உயிர் இழப்புக்கள் மற்றும் பாதிப்புகளுக்கு நிவாரணம் மற்றும் புனர்வாழ்வு உதவிகள் பெற வேண்டுமாயின் அவற்றை சமாதான நீதிவான்கள் உறுதிப்படுத்தினால் போதுமானது.

இப்படி அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் அறிவித்துள்ளது.

முன்னர் இதுபோன்ற உறுதிப்படுத்தல்களை

(4ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் உணர்வுகளை விளங்குதல் அவசியம்

### ஜெயலலிதா கூறுகிறார்

சென்னை, மார்ச் 8

விடுதலைப் புலிகள் இளைஞர்கள்; இலட்சியவாதிகள். பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முன்னர் அவர்களின் உணர்வுகளை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்

அ தி மு க. (ஜெ) பிரிவுத் தலைவி செல்வி ஜெயலலிதா மூன்கண்டவாறு தெரிவித்தார்

இப்படி 'இந்து' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய அபிப்பிராயத்தைக் கேட்ட போதே செல்வி ஜெயலலிதா இதனைத் தெரிவித்தார்

மேலும் அவர் சொன்னதாவது;

பேச்சுக்கள் மூலம் தீர்வுகாண இந்திய அரசும் விடுதலைப் புலிகள் இயக்கமும் முன் வரவேண்டும்.

அமைதியின் தேவை இதற்காக மத்திய அரசு எடுக்கும் எல்லா நடவடிக்கைகளுக்கும் நாம் ஆதரவு வழங்க வேண்டும்.

இப்படி செல்வி ஜெயலலிதா தெரிவித்தார் என்று 'இந்து' செய்தியில் கூறப்பட்டிருக்கின்றது. (இ எ)

## நிலைமை இதுதான்!

லண்டன், மார்ச் 8

கிழக்கு மாகாணத்தில் இந்திய அமைதிப் படையினரின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டிருக்கின்றது.

இப்படிக் கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் அறிவித்ததாக பி. பி ஸி. நேற்றிரவு தெரிவித்தது.

சிங்களக் கிராமங்களில் இலங்கை இராணுவத்தின் முகாம்கள் அமைக்கப்படுவதை இந்தியா ஏற்றுக் கொண்டுள்ளது.

சிங்களவர்களுக்கு எதிராக வன்முறைச் சம்பவங்கள் ஏற்படும் பட்சத்திலேயே முகாம்களை விட்டு இலங்கைஇராணுவம் வெளியே வரலாம்.

மற்றப்படி இலங்கை இராணுவம் முகாம்க

(4ஆம் பக்கம் பார்க்க)

திருமலை மாவட்ட

## சிங்களவரின் பாதுகாப்புக்கு 10,000 ஸ்ரீலங்கா இராணுவத்தினர்

கொழும்பு, மார்ச். 8

திருகோணமலைமாவட்டத்தில் உள்ள சிங்களக் கிராமங்களுக்குப் பாதுகாப்பளிக்க பத்தாயிரம் இலங்கை இராணுவத் துருப்புக்கள் அனுப்பப்பட்டுள்ளன.

நிலக் கண்ணிவெடித் தாக்குதல் இடம்பெற்ற அல்லை-கந்தளாய் வீதியில் ரோந்து புரிவதில் ஞாயிறு தொடக்கம் 800 இலங்கை இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மேலதிக இலங்கைத் துருப்புக்கள் இந்த வாரத்தில் திருமலை மாவட்டத்துக்கு வந்து சேரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

மொரவேவா தாக்குதல், சிறாறுநிலக்கண்ணிவெடித் தாக்குதல் ஆகிய சம்பவங்களைத் தொடர்ந்து தேசியப் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி தலைமையில் பாதுகாப்புக் கூட்டம் இரண்டு தினங்களாக நடந்தது.

அந்த மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவைத் தொடர்ந்தே மேலதிக இராணுவம் திருமலைக்கு அனுப்பப்படுவதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (ஒ எ)

## அமைதிப்படையும் பாதுகாப்பில் ஈடுபடும்

கொழும்பு. மார்ச் 8

திருகோணமலைமாவட்டத்தில் இந்திய அமைதிப்படை புதிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள விருப்பதாக ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்குத் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இந்திய அமைதிப் படையின் தென்பிராந்தியத் தளபதி சல்கத் இந்தியத் தூதரக முதலாவது செயலாளர் ஹர்திப் சிங்பூரி ஆகியோர் ஜனாதிபதி ஜெயவர்த்தனவை நேற்றுச் சந்தித்து, திருமலை மாவட்டத்தில் எழுந்துள்ள புதிய நிலைமை பற்றிப் பேசினர்.

அப்போதே இந்திய அதிகாரிகள் இதனை ஜனாதிபதியிடம் தெரிவித்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பிறிமா இன பிராவன் பேட்டுக்குஞ்சுகள் மார்ச் 5 ம் திகதி சனிக்கிழமை தொடக்கம் விநியோகிக்கப்படுகின்றது. 12 ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் பறொயிலர் குஞ்சு விநியோகிக்கப்பட இருக்கிறது. ஸ்ரீ வாணி பக்ககசாலை, திருநெல்வேலிச் சந்தி. S. M. சாப்வெயர் 11/6 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் பதிவு செய்யவும். (1846)

நீ ஜென்டிசன் C 90, C70, C 50. ஆகிய மோட்டார் சைக் விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி. நா கந்தசாமி. ஞான சேவன் சராஜ், 41/1 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (1630)

Urlans Farm Ltd, Kandy கோழிக்குஞ்சுகள் 16-03-88 புதன் கிழமை விநியோகிக்கப்படும். (Lohmann) பிரவுண் பேடு ரூ 12 50 (Lohmann) சேவல் ரூ 4 00 முன் கூட்டியே பதிவு செய்யவும் இல. 9 சூராவத்தை ரோட் (கந்தையா லேன்) சுன்னாகம் (ஸ்டேசனுக்கு அருகாமையில்)

### யாருடைய பொருள்?

பவுணால் செய்யப்பட்ட ஓர் "பென்ரன்" சுண்டுக்குளி மகளிர் பாடசாலைக்கு அண்மையில் சோ யோகசுந்தரம் என்பவரினால் கண்டு எடுக்கப்பட்டுள்ளது. இதை "சுந்தரம் பிறதர்ஸ்" 23/4 மணல்தறை ஒழுங்கை, சந்தர் மடம், யாழ்ப்பாணம். என்ற முகவரியில் உரியவர் சகுந் ஆதாரங்களுடன் பெற்றுக்கொள்ளவும் (1849)

### தொழிற் பயிற்சி கல்வி

Radio T V Air Conditioning Refrigeration, வயறிங், வெல்டிங், மோட்டார், மெச்சானிசம், வைண்டிங், Spoken English Typing சிறந்த செய்முறைப் பயிற்சிகளுடன் ஆரம்பமாகின்றன. அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும். Vispa Engineering. Ad H-1 328, Navalar Road, Jaffna. (1840)

Phy - திரு. சௌந்தி, A/L 88 - Paper Class 89 பொறியியல் Chem 88 - Paper Class 89-பொது இரசாயனம் Appd/Pure - திரு. துரையப்பா A/L 88 Paper Class தொடர்பு;- Sham Rock Academy சுண்டுகுழி. (1837)

### ஞேணியோ

கிளீன் - கட் உங்களை என்றும் வரவேற்கின்றது. ஞேனியோ வேலைகளுக்கு என்றும் நீங்கள் நாடும் இடம் கிளீன் - கட் இல. 239 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

### TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும். மற்றும் வாங்கவும் — விற்கவும் Fudo Enterprises, 39/17, Power House Road, 3rd Lane, Jaffna (1803)

### VACANCY

Wanted Urgently A Female Accounts Clerk/ Book - Keeper With 3 Years Experience And Able To Handle Accounts Independently in English Salary Negotiable Brite Soap Industries, K.K.S. Road, Mallakam. (1841)

### தேவை

பேக்கரியில் வேலை செய்வதற்கு ஆட்கள் தேவை அனுபவம் உள்ளவர்கள் நேரில் வரவும் சே நி பேக்கரி ஒாற்பதி ரோட், கொக்குவில் கிழக்கு. (1826)

லண்டனில் வேலை செய்யும் 32 வயதுடைய செவ்வாய் தோஷமற்ற இந்து வேளாள ஆணுக்கு மணமகள் தேவை, லண்டனில் வசிக்கும் அல்லது தமது ஏற்பாட்டில் லண்டன் செல்லக் கூடியவர்கள் விரும்பத்தக்கது. ஜாதகம் மற்றும் விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். உதயன் C/O-86, 15, இரண்டாம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (1853)

நகரின் மத்தியில் உள்ள கிறீம் ஹவுசுக்கு விற்பனையாளர், காசாளர், மேற்பார்வையாளர் தேவை பெண்கள் விரும்பத்தக்கது. தொடர்புகொள்க, 404, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம். (1835)

யாழ் நகரில் அமைந்துள்ள பிரபல வர்த்தக நிறுவனம் ஒன்றிற்கு கீழ் குறிப்பிடும் பதவிகளுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன தகமைகளுடன் முன் அனுபவம் உடையோர், உடன் விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:- விளம்பர இல-80, C/O உதயன் நாவலர் வீதி, யாழ்ப்பாணம்

1. கணக்கியல் லிகிதர் (Accounts Clerk) 2. விற்பனைப்பிரதிநிதி (Sales Rep) 3. இரவு நேரகாவலாளி (Night Watcher (1634)

கிராம சேவையாளராக வேலை பார்க்கும் 28 வயது பிராமண இளைஞர் ஒருவருக்கு பெண் தேவை, மணப்பெண் படித்தவராகவும், அழகுள்ளவராகவும் இருக்க வேண்டும். சீதனம் எதிர்பார்க்கப்படும். விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். C1083 மே/பா உதயன் 15, 2ம் ஒழுங்கை மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம். (1845)

### புத்தகம்

தாவரபோசன சமையல் - புஷ்பாஞ்ஜலி முருகேசபிள்ளை- திருத்திய பதிப்பு விலை ரூபா 120/- வெளிநாட்டில் உள்ள உங்கள் அன்புக்குரியவர்களுக்கு சமையல் செய்வதற்கு அரியதோர் நூல் விற்பனையாளர்கள் பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (1602)

சுலபமாக ஆங்கிலம் பேசுவதற்கு Spoken English 40/- தமிழ் மூலம் சிங்களம் படிக்க நல்லதோர் புத்தகம் 20/- மலிவு விலையில் என் ஜே நிடம், "வாழ்க்கைக்கு நலம் தரும் நியூமராலஜி 6/50, பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (1603)

### படகு எடுத்துச் சென்றது அமைதிப்படை

பிளாஸ்டிக் படகு ஒன்று கடந்த சனிக்கிழமை இந்திய அமைதிப்படையால் குருநகரில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டது.

இப்படகு கடந்த காலங்களில் இலங்கை இராணுவத்தால் மண்டதீவுக்கும், யாழ்-கோட்டைக்கும் இடையே பாவிக்கப்பட்டு வந்ததாகும்.

கடலில் அநாதரவாக மிதந்து வந்தபொழுது தமிழீழ விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட மேற்படி படகு கடந்த பல மாதங்களாகக் குருநகரில் வைக்கப்பட்டிருந்ததாகத் தெரிய வருகிறது. (அ-57)

## காசாளர் தேவை

நெல்லியடியில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள குளிர்பான ஸ்காபனத்திற்கு பிணைப் பணமாக ரூபா 10000/- கட்டக்கூடிய காசாளர் தேவை ஆண் / பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம் விண்ணப்ப முடிவு திகதி 23-3-88
C/o 85 உதயன்,
15 2nd Lane,
Power house Rd. Jaffna.

## சமட்ரக் (SAMATRAC) வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையம்

வெற்றிடங்கள்;

● **சிங்கப்பூர்**

பணிப்பெண்கள்
வீட்டு உதவியாளர்கள் (பெண்கள்) } வயதெல்லை 22-35 வரை

● **குவைற்;**

சாரதிகள் (Domestic Drivers)
பணிப்பெண்கள் (முஸ்லிம்களும், முஸ்லிம் அல்லாதவர்களும்)
சமையல்காரர்கள் (ஆண் பெண் இருபாலரும்)
ஆங்கில ஆசிரியைகள் (Montessori)
உடுப்பு தையல்காரர் (பெண்கள்)
உடுப்பு தயாரிப்பவர் (Dress Makers)
(வயதெல்லை 22-40 வரை)

இதாவெளிநாட்டு வேலை வாய்ப்புகட்கு ஆண், பெண் இருபாலாரும் கீழ் உள்ள முகவரியில் பாஸ்போட் உடன் தொடர்பு கொள்ளவும்.

மு. ப. 8.30 - பி. ப. 4 30 வார நாட்களில்
மு. ப. 8.30 - பி.ப. 12 30 சனிக்கிழமையில்

**வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிலையம்**
**சமட்ரக் ரவல் லிமிட்டெட்,**
262, மெயின் வீதி, யாழ்ப்பாணம்
லைசென்ஸ் இல. 584.

## யாழ்ப்பாணக் கல்லூரித் தொழில் நுட்ப நிறுவனம் வட்டுக்கோட்டை
## Jaffna College Institute of Technology

### கல்வி ஆண்டு 1988/1989

1988 ஏப்பிரலில் தொடங்கவிருக்கும் பின்வரும் பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பங்கள் 28 மார்ச் 25ஆம் தேதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்

1. Diploma in Computer Programming & Data Processing
(கொம்பியூட்டர் பயிற்சிநெறியும் தரவு நிரைப்படுத்தலும்)
I Year — 2 Semesters
Module I. Basic Rs 1000/-
Module II. Cobol Rs. [illegible]00/-

2. Diploma in Draughtsmanship (civil)
(குடிசார் வரைவல்லுநர் பயிற்சி)
1 year — 2 Semesters — Rs. 2400/.

மேற்கண்ட இரு நெறிகளுக்கும் அனுமதிக்கான தகைமைகள்:-
க. பொ த (சாதாரணதர) பரீட்சையில் ஆங்கிலத்தில் சித்தியும், கணிதம், விஞ்ஞானம் இரண்டிலும் திறமைச்சித்தியும் உட்பட ஆறு பாடங்கள்.
பால் / வயது:- 21 வயதுக்குட்பட்ட இருபாலாரும்
மொழி மூலம்:- ஆங்கிலம்

3. B. Eng — Bachelor of Engineering
4 years full time course in Engineering leading to (B. Eng. Award)
காலம்:- 4 ஆண்டுகள் (8Semesters)
தகைமைகள்:- க. பொ. த. (உ/த) பரீட்சையில் கணிதப்பிரிவில் 3 பாடங்களில் சித்தி.
பால் / வயது:- 23 வயதுக்குட்பட்ட இருபாலாரும்-
கட்டணம்:- செமஸ்டருக்கு ரூ 2500/- (மற்றப்படக்கூடியது)

ஆய்வுகூடப் பரிசோதனைகளும் பொறியியல் வரைதல் பயிற்சிகளும் இப்பயிற்சி நெறியில் அடங்கியுள்ளன. மாணவர்கள் லண்டன் E. C. E. (Part I & Part II) பரீட்சைகளுக்குத் தோற்றமுடியும். நிறுவன அலுவலகத்தில் விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்று 25-03-88க்கு முன் மனுச்செய்யவும். (விண்ணப்பப் படிவங்களை நேரிலோ அன்றி ரூ 1/- பெறுமதியுள்ள 6 (ஆறு) தபால் முத்திரைகளை சுயவிலாசமிடப்பட்ட 9" X4" தபாலுறையுடன் அனுப்புவதன் மூலமோ பெற்றுக் கொள்ள முடியும்.)

நேர்முகப் பரீட்சைகள் மூலம் [illegible]

பதிவாளர்

## கொழும்பு-யாழ்-கொழும்பு விமான சேவை

**ஆரம்பம்: 12th March 1988**
வாரம் 2 நாட்கள்
தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

**V. M. S.**
**Travels & Tours (Pvt) Ltd**

M 4, Hotel Galadari Meridien
64, Lotus Road, Colombo - 1
T. Phone 544544, 26157
Hotel Gnanams

299. Clock tower Road, Jaffna.
மற்றும் பாஸ்போட், விசா, ரிக்கட் எம்மால் துரித கதியில் செய்து கொடுக்கப்படும்.
(1606)

## நெல்லியடியில் வெளிவாரி பட்டப் படிப்புகள்

G. A. Q. 89 (கலைமுதற்தேர்வு) B. A. 88 (கலைமாணி)

G. C. E (A/L) 3 பாடங்களில் சித்தியடைந்தவர்களும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம். பல்கலைக்கழகப் பதிவுகள் யாவும் இந்நிறுவனத்தால் செய்து கொடுக்கப்படும் விண்ணப்ப முடிவுத்திகதி நெருங்கிக்கொண்டிருக்கின்றது உங்கள் விண்ணப்பத்துக்கு முந்துங்கள் விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன

### London Exam.

பிட்மன் சுருக்கெழுத்து,
தட்டச்சு பயிற்சி வகுப்புகள் (தமிழ், ஆங்கிலம்)

ஆரம்பம்:- 13-04 88

லண்டன் பரீட்சைக்கு விண்ணப்பிப்பவர்கள் முன்கூட்டியே உங்கள் விண்ணப்பங்களைப் பதிவுசெய்து கொள்ளவும்.

தொடர்பு:-
நிர்வாகி
**கெயின்ஸ் இன்ஸ்ரிரியூட்**
நெல்லியடி.

## Science Academy

(B. M. C. க்கு முன்பாக)

BOTANY — Mr. குணசீலன். B. Sc.
Reproduction — இனப்பெருக்கம்
புதன் / வெள்ளி 9-00 — 10-30 a. m.

ECOLOGY சூழலியல்
புதன் / வெள்ளி 10-30 — 12-00 a. m.

CHEMISTRY Mr. V. S. ரஞ்சன்
காபன் இரசாயனம் (திங்./புதன்/வெள். 1-30)
அசேதன இரசாயனம் ( ,, ,, ,, 2-30)
வினு/விடை ( ,, ,, ,, 3-30)

**DAY TIME PAPER CLASS**
(திங்கள் / புதன் / வெள்ளி)

12-30 BOTANY குணசீலன் B. Sc.
1-30 ZOOLOGY கேது B. Sc.
2-30 PHYSICS கலாமணி B. Sc.
3-30 CHEMISTRY ரஞ்சன் B. Sc.
(அலகு ரீதியாக நடைபெறும்)

**SATURDAY / SUNDAY CLASS**
★ இருபடி கோவையும் விகிதமுறு சார்புகளும் அதன் வரைபுகளும்
★ எறியம்

By
Mr. P. வேலாயுதம் B. Sc. (லெக்டர்)

Day Class
APPLIED — எறியம்
PURE — வரிசை மாற்றம்

By
Mr. S. பிரேம்நாத் B. Sc.

## நவஜீவன புனருத்தாரண நிலையம் தொழில் நுட்பப் பயிற்சி வகுப்புக்கள்

1. அடிப்படைப் பொறியியல்
2. கடைச்சல் இயந்திரம் (Lathe Machine)
3. ஒட்டுநர்:
I. மின்சார ஒட்டுநர் (Arc Welding)
II. வாயு ஒட்டுநர் (Gas Welding)

மேற்குறிப்பிட்ட பயிற்சிகள் அனைத்தும் இணைத்தே வழங்கப்படும்.

பயிற்சிக் காலம்: ஒரு வருட முழு நேரம்.
கல்வித் தராதரம்: க பொ.த (சா/த) இல் கணிதம் உட்பட 5 பாடங்களில் சாதாரண சித்தி.
வயதெல்லை: 16 — 22 வயது.
ஆரம்பம்: 01 - 04 - 1988
கட்டணம்: பயிற்சிக் கட்டணம் மாதாந்தம் 100/-

விண்ணப்பப் படிவங்கள் பங்குனி 19ஆம் திகதிக்கு முன் கீழ்க் குறிப்பிட்ட முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

குறிப்பு: தங்குமிட உணவு வசதியும் உண்டு.
நிர்வாகி.
'நவஜீவனம்', பரந்தன். (1844)

## பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ. சங்கம் பளை
## வெற்றுச் சாக்கு கேள்விப்பத்திரம்

மேற்படி சங்கத்தில் 6000 வெற்றுச் சாக்குகள் கேள்விப் பத்திரம் மூலம் விற்பனைக்கிருக்கின்றது.

கேள்விப் பத்திரம் சமர்ப்பிக்க விரும்புவோர் சங்கத்தில் ரூபா 100/- கேள்வி வைப்புப் பணமாகச் செலுத்தி விதிக்கப்பட்டுள்ள படிவத்தில் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விகள் யாவும் பதிவுத் தபால் மூலம் "பொது முகாமையாளர், பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ. சங்கம், பளை" என்னும் முகவரிக்கு 18-3-88ந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

மேலதிக விவரங்கட்கு வேலை நாட்களில் சங்க அலுவலகத்தில் தொடர்பு கொள்ளலாம்.

பளை
6-3-1988 பொது முகாமையாளர்

## 31 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி



நீர்வேலி தெற்கு
**திரு. க. சி. பொன்னுத்துரை**
அவர்கள்
[கூட்டுறவு இலாகா சிரேஷ்ட உதவிஆணையாளர்]

எனதருமை அண்ணுவே,

கூட்டுறவு இலாகாவில் சங்கப்பரிசோதகராய், உதவி ஆணையாளராய், சிரேஷ்ட உதவி ஆணையாளராகப் பதவி வகித்துப் பெருமை தேடிக்கொண்ட கல்விமானே!

இந்தியா, யப்பான், மலேசியா, சிங்கப்பூர் ரஷ்யா முதலிய தேசங்களில் நடந்த மகாநாடுகளில் பங்குபற்றிய அண்ணுவே!

பிறந்த இடமுமின்றி - திருமணம் செய்து கொண்ட இடமுமின்றி கொழும்பு சென்று அங்கேயிருந்து சிவபதம் அடைந்தீர்களே! உங்கள் பூதவுடலைக் கண்ணால் காணமுடியவில்லையே,

கவலை! கவலை!

உங்களை இழந்து கண்ணீர் விடுகின்ற உற்றார், உறவினர், நண்பர்கள், உங்கள் அன்பான சகோதரி எல்லோரும் 31 ஆம் நாளாகிய இன்று தங்கள் ஆன்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு சகோதரி
திருமதி அன்னபூரணம் கனகரத்தினம்
நீர்வேலி தெற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதய சங்கற்பம்

எப்போதும் சுறுசுறுப்பாக இரு. எதையும் நாளைக்கு என்று பின்போடாதே.

— சுவாமி சிவானந்தர்.

உதயன்
உண்மை - அறிவு - நடுநிலைமை
இல:-292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805, 22073
யாழ்ப்பாணம்.
08.03.1988 த.பெ.இல:-23

## அவசரத்தின் நோக்கம்என்ன?

பொதுத் தேர்தல் விரைவில் நடக்கலாம். மே மாதத்துக்கும் அக்டோபருக்கும் இடையில் நடக்கலாம். அது எந்த நேரமும் நடக்கலாம். இப்படிப் பல்விதமான ஆருடங்கள் தென்னிலங்கையில் பரவத் தொடங்கி உள்ளன.

முறைப்படி, 1983 ஜூலைக்கு முன்னர் பொதுத் தேர்தல் ஒன்று நடந்திருக்க வேண்டும். அது நடக்கவில்லை. 1982 டிசம்பரில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தி நாடாளுமன்றத்தின் ஆயுட்காலம் நீடிக்கப்பட்டது

பதவியில் இருந்த அரசாங்கம், தான் சட்டரீதியாகத் தொடர்வதற்குச் செய்த ஒரு வேண்டாத கருமம் அது. பொதுத் தேர்தலையே நடத்தித் தனக்கு மக்கள் ஆதரவு உண்டா என்பதனை அறிந்திருக்க வேண்டும் அரசு. அப்படிச் செய்ய அதற்குத் துணிவிருக்கவில்லை. மக்கள் ஆதரவில் சந்தேகம் இருந்ததால்சர்வஜன வாக்கெடுப்பை நடத்திச் சமாளித்தது. ஆகவே மக்களின் சரியான தீர்ப்பை, உரிய ஜனநாயக முறையில் பெறுவதற்குப் பொதுத் தேர்தல் அவசியம். அதனை மறுப்பதற்கில்லை.

ஆனால் தேர்தலை நடத்துவதற்கான சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறதா என்பதே இப்போதைய முக்கிய கேள்வியாகும்.

மாகாணசபைத் தேர்தலுக்கு அறிவிக்கப்பட்டு, அது காலவரையின்றி ஒத்திப் போடப்படலாயிற்று. ஹேமகம நாடாளுமன்ற இடைத் தேர்தலுக்கு திகதி குறிப்பிடப்பட்டு அதுவும் பின்போடப்படலாயிற்று.

இத்தகைய சூழ்நிலையில் எப்படிப்பொதுத் தேர்தலை நடத்துவது?

பொதுத் தேர்தல் நடத்தப்படுவதற்கு முன்னர் தமிழர் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். ஆனால் இலங்கை அரசோ, இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை எழுத்துக்கு எழுத்து மீறி நடப்பதிலேயே அக்கறை செலுத்தி, செயலிலும் காட்டி வருகிறது ஆதலால் அரசு தமிழர் பிரச்சினையைத் தீர்க்கும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. ஆகையால் தமிழ்ப் பகுதிகளில் பொதுத் தேர்தல் என்ற பேச்சுக்கே இடமில்லை

தென்னிலங்கையிலும் நாளாந்தம் வன்செயல்கள் பெருகிக்கொண்டு இருக்கின்றன. அவற்றை அரசால் கட்டுப்படுத்தமுடியவில்லை. இவ்வாறான ஒரு இயலாத் தன்மையுடன் சுதந்திரமான பொதுத்தேர்தலைத்தென்னிலங்கையில் தானும் நடத்த முடியும் என்பது வெறும் கற்பனையே.

தமிழர் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். தென்னிலங்கையில் வன்செயல்கள் தடுக்கப்பட வேண்டும் அவற்றுக்கான உகந்த சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும். அவற்றைச் செய்த பின்னரே பொதுத் தேர்தலைக்குறித்துப் பேச்செடுக்க முடியும்.

தமிழர் பிரச்சினையைப் பொறுத்தவரையில், இலங்கை — இந்திய ஒப்பந்தம் பூரணத் தீர்வு என்று எவரும் நினைத்து விடலாகாது எனினும் அதனையாவது சரிவர நிறைவேற்ற இலங்கை அரசு இனியாவது அக்கறை காட்டுவது மிகப் பிரதானம். ஒப்பந்த நிறைவேற்றத்துக்கு உகந்த சூழ்நிலையை உருவாக்குவதும் கட்டாய தேவை.

அவற்றைச் செய்த பின்னரே, பொதுத் தேர்தலைப் பற்றிச் சிந்திக்கவேண்டும் அவசரப்பட்டு ஆவதுஎன்ன? குழப்பமான சூழ்நிலையில் தேர்தலை வைத்து சர்வாதிகாரத்தை உருவாக்கும் முயற்சியா?

## செய்திக்கொத்து

### கொடித்தினம்

சாவகச்சேரி, மார்ச் 8

கைதடி சைவச் சிறுவர் இல்ல வருடாந்தக் கொடித்தினம் வழமை போல் இம்மாதம் 10ஆம் திகதி இடம்பெறும்.

இல்லநடராஜர் மண்டபத்தில் நடைபெறும். இக் கொடிதின நிகழ்ச்சியை முன்னிட்டு இல்ல புரவலர் அமரர் திரு. விசுவப்பாவின் இரண்டாவது நினைவு விழா நிகழ்ச்சிகளும் நடைபெற உள்ளன (இ-31)

### அமைதிப்படை முகாம்கள்

சாவகச்சேரி, மார்ச் 8

மேலும் மூன்று இந்திய அமைதிகாக்கும் படையினரின் முகாம்கள் நிறுவப்பட்டுள்ளன.

பெருங்குளச்சந்தி, மட்டுவில் சிவன்கோவிலடி, கைதடி நுணாவில் சந்தி ஆகியமூன்று இடங்களிலே மேற்படி இவை அமைந்துள்ளன. [இ-31]

### கல்வயல் பகுதிகளில் தேடுதல்

சாவகச்சேரி, மார்ச் 8

ஞாயிறு அதிகாலை நான்கு மணியளவில் இந்திய அமைதிகாக்கும் படையினர் கல்வயல், சற்குழி கிராமங்களைச் சுற்றிவளைத்து தேடுதல் முயற்சியை மேற்கொண்டனர்

வீடுகள் தோறும் சென்று இளைஞர்களைப் பெருமளவில் அழைத்துச் சென்று கனகன்புளியடி முகாமில் வைத்து விசாரணை நடத்தினர்.

தலையாட்டிகளின் முன்பும் கொண்டுசெல்லப்பட்ட இவர்களில் நான்குபேர் மட்டும் சாவகச்சேரி முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (இ-31)

### புதிய அதிபர்

கொடிகாமம், மார்ச் 8

மீசாலை விக்னேஸ்வர வித்தியாலய அதிபராக திரு. கே. செல்லத்துரை நியமிக்கப் பட்டுள்ளார்.

இங்கிருந்த முன்னைய அதிபர் திரு. கு கேசவன் மந்துவில் சிறிபாரதி வித்தியாலயத்துக்கு மாற்றம் பெற்றார். (இ-75)

### சொறி, சிரங்கு மருந்து இல்லை!

வட்டுக்கோட்டை, மார்ச் 8

சங்கானை அரசினர் வைத்தியசாலையில் சொறி சிரங்குக்கான மருந்து வகைகள் இல்லாமையால் ஏழைநோயாளிகள் பெரிதும் கஷ்டப்படுகின்றனர்.

சொறி, சிரங்குகளினால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் சிகிச்சை பெறுவதற்காக வந்தும் பயனின்றிக் கஷ்டப்படுகின்றனர். (இ-161)

### பிரதேச சபை

முல்லைத்தீவு, மார்ச் 8

முல்லைத்தீவு அபிவிருத்திச் சபை மறிற்றன் பற்று, புதுக்குடியிருப்பு மாந்தை கிழக்கு, துணுக்காய் என நான்கு பிரதேச சபைகளாக மாறி உள்ளது (இ-ரி)

### மறைக்கல்வி வினாவிடைப் போட்டி

மானிப்பாய், மார்ச் 8

யாழ் மறை மாவட்ட கத்தோலிக்க ஆசிரியர் சங்கம் அகில இலங்கை தேசிய மறைக்கல்வி சம்பந்தமான வினாவிடைப் போட்டி ஒன்றை பாடசாலை ரீதியில் நடத்த முன்வந்துள்ளது.

மேற்படி போட்டி கிளை மட்டத்தில் மே மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னும், மறைவட்டப் போட்டி மே மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னும் நடைபெறும்

தேசிய ரீதியிலான போட்டி இவ்வருட ஜூன் மாதத்தில் நடைபெறும். (இ-90)

### பிரார்த்தனை

மானிப்பாய், மார்ச் 8

கைதடி சைவச் சிறுவர் இல்லப் புரவலர் அமரர் தம்பு விஸ்வப்பா அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவை முன்னிட்டு இம்மாதம் 10ஆம் திகதி காலை நடேசர் ஆலயத்தில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நடைபெறும் (இ-90)

பொத்துவில் பகுதியில்

# ஊரடங்கை தளர்த்து மாறு கோரிக்கை

கல்முனை மார்ச் 8

பொத்துவில் பொலீஸ் பகுதியில் அமுல் செய்யப்படும் ஊரடங்கு உத்தரவைஇரவு ஒன்பது மணியிலிருந்து அமுல் செய்யும்படி கோரும் மகஜர் ஒன்றை பொத்துவில் பிரஜைகள் குழுத் தலைவர் திரு. எஸ் ஸ்ரீகாந்தன் பொத்துவில் இந்திய அமைதிப்படை முகாம் பொறுப்பதிகாரி திரு. தெய்வேந்திரசிங் அத்ரியிடம் கையளித்துள்ளார்

பொத்துவில்பிரதேசத்தில் தற்போது விவசாய அறுவடை நடைபெற ஆயத்தமாக இருப்பதாலும், பள்ளிவாசல்களில் ஐங்காலத்தொழுகையின் ஒன்றான இஷா தொழுகையை முஸ்லிம் மக்கள் அச்சமின்றி நிறைவேற்றி வீடு செல்வதற்கும், அறுவடைக்கு வெளியூர்களிலிருந்து வருவோர் அச்சமின்றி நடமாடவும் உதவும் பொருட்டு ஊரடங்கு உத்தரவை தளர்த்த வேண்டுமென மகஜரில் கோரப்பட்டுள்ளது

இது சம்பந்தமாக திரு. அத்ரி மேலிடத்துடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளார்.

### மாசி மகவிழா

சாவகச்சேரி, மார்ச் 8

சாவகச்சேரி நுணாவில் மேற்கு ஸ்ரீ துர்க்கை அம்மன் தேவஸ்தானத்தில் மாசி மக பூரா சிறப்புற நடைபெற்றது.

மாலை வசந்த மண்டப பூசை, பஞ்சமுக அர்ச்சனை ஆகியவையுடன் அம்பாள் உள்வீதி உலவும் இடம் பெற்றன. (இ-31)

### சுட்டுக் கொலை

கிராமோதய சபைத் தலைவர் ஒருவர் சிலாபம் பொலீஸ் பகுதியில் நேற்றுமுன்தினம் சுட்டுக் கொல்லப்பட்டார்.

உயிரிழந்தவரின்பெயர் காமினி பெர்னாண்டோ. மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டுபேர்களில் ஒருவர் இவரைச் சுட்டுவிட்டு விரைந்தோடித் தப்பினர் என்று பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-எ)

ஜீ.சி. ஈ. பரீட்சை

# முன்னேற்றமான நடவடிக்கை எதுவும் தென்படவில்லை

### மாணவர் சங்கம் கவலை

வடக்கில் நடைபெறாமல் போன ஜீ சி ஈ. சாதாரணதரப் பரீட்சையை மீண்டும் நடத்த இலங்கை அரசினரும் இந்திய அமைதிகாக்கும் படையினரும் இணைந்து நடவடிக்கைகள் எடுப்பதாகக் கூறப்படுகின்றது ஆனால் இது சம்பந்தமாக எந்தவித முன்னேற்றமான நடவடிக்கைகளுமே தென்படவில்லை

இப்படி இலங்கை தேசிய மாணவர் சங்கத்தின் வடபிராந்தியக்கிளை அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது,

கஷ்டப்பட்டு தமது கல்வியையே நோக்காக் கொண்டு படிக்கும் இளம் மாணவ சமுதாயத்தை சம்பந்தப்பட்டவர்களின் நடைமுறை விரக்தியின் விளிம்பிற்குத்தான் தள்ளும்.

அந்த விரக்தியின் விளிம்பில் அவர்களை நிறுத்தாமல், உரிய நடவடிக்கைகள் எடுத்து மேற்படி பரீட்சையை காலக்கிரமத்தில் நடத்தி அவர்களது கல்வி எதிர்காலத்திற்கு ஒளியூட்ட வேண்டும்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது (இ)

# சங்கானையில் கொள்ளை!

நள்ளிரவு நேரத்தில் வீட்டுக்கதவை உடைத்து உட்புகுந்த கொள்ளைக் கோஷ்டியினர் நித்திரையில் இருந்த கணவனை கட்டிப் போட்டு விட்டு துப்பாக்கி முனையில் மனைவியை பயமுறுத்தி 12 ஆயிரம் ரூபா ரொக்கப் பணத்தையும் 25 ஆயிரம் ரூபா பெறுமதியுள்ள தங்க நகைகளையும் எடுத்துச் சென்றனர்

இச்சம்பவம் சங்கானை தேவாலய வீதியில் நடைபெற்றது

இச்சம்பவம் தொடர்பாக அறிய வருவதாவது; கணவனும் மனைவியும் நித்திரையில் இருந்த சமயம் இனந்தெரியாத மூவர் முகமூடியுடன் கையில் துப்பாக்கியுடன் வீட்டுக் கதவை உடைத்து உட்புகுந்தனர்

மனைவி எழுந்து சத்தமிட முயன்ற பொழுது அக்கோஷ்டியை சேர்ந்த ஒருவர் துப்பாக்கியை நீட்டி. கழுத்தில் கை வைத்து அழுத்திய படி இருக்க மற்றிருவரும் கணவரை கயிற்றால் கட்டிப் போட்டு விட்டு, பெறுமதி மிக்க உடுபுடவைகள், நகைகள், பணம் ஆகியவற்றை கொள்ளையிட்டுச் சென்றனர்

இவர்கள் பயன்படுத்தியது போலித்துப்பாக்கி என்று பின்பு தெரிய வந்தது

இக்கொள்ளை பற்றி இந்திய அமைதிகாக்கும் படையினரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ-90)

### வை. எம். சி ஏ உதவி

சமீபத்தில் அசம்பாவிதத்தின்போது குடும்பத் தலைவரை இழந்த குடும்பம் ஒன்றுக்கு 950 ரூபா பெறுமதியான பொருள்கள் யாழ் வை. எம். சி. ஏ, யால் வழங்கப்படும்.

உலக இளைஞர் கிறிஸ்தவ சங்கங்களின் சமாஜம் இந்த நிதி உதவியை வழங்கியுள்ளது.



### பொய்யாமொழி

குறள்:

உள்ளம் இல்லாதவர் எய்தார் உலகத்து
வள்ளியம் என்னும் செருக்கு

பொருள்:

ஊக்கம் இல்லாதவர், இவ்வுலகில் யாம் வண்மை உடையோம்? என்று தம்மைத் தாம் எண்ணி மகிழும் மகிழ்ச்சியை அடைய மாட்டார்.

# இலங்கைக்கடலில் இந்திய நீர் மூழ்கி அமெரிக்கா கவலை

கொழும்பு, மார்ச் 8

இந்தியக் கடற்படையினால் குத்தகைக்குப் பெறப்பட்ட சோவியத் நீர்மூழ்கிக் கப்பல் இலங்கைக் கடல் பிராந்தியத்தில் ரோந்து புரிவது குறித்து அமெரிக்க அரசு கவலை அடைந்திருக்கின்றது.

கொழும்பில் ராஜதந்திர வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன.

இலங்கையைச் சுற்றியுள்ள கடல் பரப்பில் இந்தியக் கடற்படை தனது பலத்தை அதிகரித்து வருவது, டியேகோகார்ஸியா தளத்தில் அமெரிக்கா கொண்டுள்ள நலன்களுக்குப் பாதகமாக அமையும் என்றும் அமெரிக்க அரசு வட்டாரங்கள்கவலையடைகின்றன என்றும் ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

அமெரிக்காவின் கவலையை ராஜாங்க அமைச்சின் உதவிச்செயலாளர் ரொபர்ட்பெக், வாசிங்டனில் நடந்த காங்கிரஸ் கூட்டம் ஒன்றில் வெளியிட்டார். (இ-எ)

# சோவியத், அமெரிக்கத் தூதரகங்கள் முன் ஆர்ப்பாட்டம்

## ஈராக்குக்கு ஆயுதம் வழங்குவதை எதிர்த்து

தெஹ்ரான், மார்ச் 7

ஈராகுக்கு ஆயுதங்கள் வழங்கப்படுவதைக் கண்டித்தது ஈரானிய மாணவர்கள் தெஹ்ரானில் உள்ள சோவியத், அமெரிக்கத் தூதரகங்கள் முன்னால் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

சில ஆர்ப்பாட்டக்காரர்கள், சோவியத் தூதரகத்தினுள் அத்து மீறி நுழைந்து விட்டனர்.

ஈரானியக் காவலர்கள் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இச்சம்பவம் குறித்து சோவியத் அரசு தனது ஆட்சேபனையை ஈரானிடம் தெரிவித்து இருக்கிறது

தனது அதிகாரிகளின் உயிர் ஆபத்தான நிலையில் இருப்பதாக சோவியத் அரசு கூறியுள்ளது.

### பங்களாதேஷ் தேர்தலில் ஆளும் கட்சியினர் அமோக வெற்றி

டாக்கா, மார்ச் 7

பங்களாதேஷ் பொதுத் தேர்தலில் ஆளும் ஜாதியக் கட்சிக்கு அறுதிப் பெரும்பான்மை கிடைத்தது.

வன்செயல்களின் மத்தியில் பொதுத் தேர்தல் கடந்த வியாழன் நடைபெற்றது.

மூன்று லட்சத்துக்கு அதிகமான ஆயுதப்படையினரின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு மத்தியில் வாக்களிப்பு இடம்பெற்றது.

15 பேர் வரையில் உயிரிழந்தனர். நூற்றுக் கணக்கானோர் காயமடைந்தனர்.

220 தொகுதிகளில் வாக்கு எண்ணும் வேலைகள் முடிவடைந்தன.

இவற்றில் 195 தொகுதிகளில் ஜனாதிபதி எர்ஷாத்தின் ஆளும் ஜாதியகட்சி வெற்றியீட்டியது.

75 தொகுதிகளில் வாக்குகள் எண்ணும் வேலை ... தேர்தல் ஆணையாளர் ஒத்திவைத்தார். (எ)

# முதலமைச்சர் ராமராவ் ஒரு சர்வாதிகாரி!

### ராஜினாமாச் செய்த எம். பி. சொல்கிறார்

புதுடில்லி, மார்ச் 7

தெலுங்கு தேசம் கட்சியில் இருந்து நாடாளுமன்ற எம்பியான திரு சிந்தா மோஹன் கடந்த புதன்கிழமையன்று ராஜினாமாச் செய்தார்

திரு மோஹன் தனது ராஜினாமாக் கடிதத்தை நாடாளுமன்றச் சபாநாயகரிடம் கையளித்துவிட்டு, வெளியேறினார்.

பின்னர் உபசபாநாயகர் திரு. தம்பித்துரை, ராஜினாமா ஏற்றுக் கொள்ளப்பட்டதாக அறிவித்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் திரு மோஹன் சொன்னார்:

"தெலுங்கு தேசம் கட்சியில் சர்வாதிகாரம் தலைவிரித்தாடுகின்றது முதலமைச்சர் ராமராவ் தீர்மானிக்கின்றபடி தான் கட்சி நடக்கின்றது'' இப்படி திரு மோஹன் சொன்னார்.

தெலுங்கு தேசம் கட்சியில் இருந்தும் ராஜினாமாச் செய்து விட்டதாக திரு மோஹன் மேலும் தெரிவித்தார்.

### மீண்டும் ஆரம்பம்

ஜெனிவா, மார்ச்.7

இரண்டு நாள் இடைவெளியின் பின்னர் ஆப்கன் பிரச்சினை சம்பந்தமான பேச்சுவார்த்தை ஜெனிவாவில் இன்று திங்கள் மீண்டும் ஆரம்பமானது. (எ)

இலங்கை-இந்திய

# கூட்டுக் கடற்படை ரோந்து கிழக்குப் பகுதிக்கும் விஸ்தரிப்பு

பாக்குநீரிணையில் தற்போது நடைபெறும் இலங்கை-இந்தியகூட்டுக் கடற்படை ரோந்து இலங்கையின் கிழக்குப் பகுதிக்கும் விஸ்தரிக்கப்படும்.

இதேவேளை கிழக்கு மாகாணக் கரைப்பகுதியில் ஆழ்கடல் மீன்பிடிப்புத் தொழில் இப்போதைக்கு அனுமதிக்கப்பட மாட்டாது.

விசாகப்பட்டினத்தில் கடந்த வாரம் நடந்த இந்திய-இலங்கைக் கடற்படை அதிகாரிகள் மாநாட்டில் மேற்கண்ட முடிவுகள் செய்யப்பட்டன.

இந்தியத் தரப்புக்கு கிழக்குத் தலைமையகத் தளபதி வைஸ் அட்மிரல் பி எஸ் தஸ்மானா, இலங்கைத் தரப்புக்கு ரியர் அட்மிரல் ஜே ஜயசூரியாவும் தலைமைவகித்தனர்.

பாக்கு நீரிணையுடன் கிழக்குக் கரையோரப் பகுதிக்கும் கூட்டு ரோந்தை விஸ்தரிப்பது என்று பேச்சுக்களில் முடிவாகியது

இப்பேச்சுக்கள் ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது

விசாகப்பட்டினத்தில் தான் இந்தியக் கடற்படையின் கிழக்குத் தலைமையகம் உண்டு. மேற்குத் தலைமையகம் பம்பாயிலும், தென் தலைமையகம் புதுடில்லியிலும் உண்டு. (அ-எ)

## வெளி உலகில்

### கணிதமேதையின் மனைவிக்கு கேம்பிரிட்ஜ் நிதி உதவி

கணித மேதை ராமானுஜத்தின் துணைவி ஜானகி அம்மாளுக்கு ஆண்டுதோறும் 45 ஆயிரம் ரூபா (இந்தியப் பணத்தில்) உதவிப் பணமாக வழங்க லண்டனில கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகம் முன் வந்துள்ளது.

சென்னையில், ஜானகி அம்மாளை அவரின் வீட்டில் சென்னையில் உள்ள பிரிட்டிஷ் தூதரக அதிகாரி சந்தித்து இவ் விஷயத்தைத் தெரியப்படுத்தினார்

கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் படித்து வந்த சமயம் எண்ணியலில்திரு. இராமானுஜம் பல ஆராய்ச்சிகளை மேற்கொண்டிருந்தார்.

அதனால் தான் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் உதவிப்பணம் வழங்கத் தீர்மானித்திருப்பதாகப் பிரிட்டிஷ் அதிகாரி சொன்னார்

### 10 பேர் பலி

கார் விபத்து ஒன்றில் 10 பேர் உயிரிழந்தனர்

ஆர்ஜன்டீனாவின் தலைநகரில் இருந்து 400 கிலோ மீட்டர் தூரத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வாடிக்கையாளர்களுக்கோர் நற்செய்தி!
அரிசி மா, வறுத்த அரிசி மா,
வறுத்த உழுத்தம் மா
பக்கட்டுகளாகவும், சாக்குகளிலும்
தொகையாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.
அண்ணா கோப்பிக் கடை
யாழ்ப்பாணம்

# உதயன்

08 - 03 - 1988 செவ்வாய்க்கிழமை

பாடசாலைப் பிள்ளைகளுக்கு
ஓர் அரிய சந்தர்ப்பம்!
நீங்கள் வாங்கும் அண்ணா ரொபி லேபிள்களை சேர்த்துக் கொடுத்து கீழ்வரும் இனாம் பொருட்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
பூனைக்குட்டி லேபிள்
நேரசூசி
அண்ணா தொழிலகம்
இணுவில்.

## இந்திய---

(1ம் பக்கத் தொடர்ச்சி)
இதனையே நாம் இருதரப்பினரிடமும் வற்புறுத்திக் கூறியுள்ளோம்.

**எம். ஜி. ஆர். முன்னிலையில்**

டிசம்பர் இரண்டாம் வாரத்தில் இப்பேச்சு வார்த்தைகள் சென்னையில் எம். ஜி. ஆர் முன்னிலையில் நடைபெற வேண்டும் என்று விடுதலைப் புலிகள் விரும்பியதை இந்திய அரசுக்கு தெளிவுபடுத்தி இருந்தோம்.

ஆனால் இதுவரை இப்பேச்சு வார்த்தைகள் தொடர்பாக எதுவித முன்னேற்றமும் ஏற்படாதது கவலையைத் தருகிறது.

எனினும் இனியும்

## அமைதிப்---

(1-ம் பக்கத்தொடர்ச்சி)
னர்.

திருமலை மாவட்டத்துக்கு இலங்கை இராணுவத்துருப்புக்கள் பத்தாயிரம் பேர் அனுப்பப்படுவர் என்ற கொழும்பு அரசின் திட்டம் பற்றியும் இப்பேச்சுக்களின் போது ஆராயப்பட்டதாகத் தெரிய வருகின்றது (ஒ-எ)

தொடர்ந்து தாமதம் செய்யாமல் இருதரப்பினரும் பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணவேண்டும் என்பதை நாம் மீண்டும் வலியுறுத்துகிறோம்.

திரு. பாலகுமார் தமது பேட்டியில் இப்படித் தெரிவித்தார். (இ-10)

# சென். ஜோன்ஸ்—சென். பற்றிக்ஸ்
# முதல்நாள் கிரிக்கெட்; ஆட்டம் சோபிக்கவில்லை

யாழ்ப்பாணம், மார்ச் 8
சென் ஜோன்ஸ், சென் பற்றிக்ஸ் அணிகளுக்கிடையேயானகிரிக்கெட் போட்டியின் நேற்றைய ஆட்ட முடிவில் சென் ஜோன்ஸ் கல்லூரி தனது முதல் இன்னிங்ஸில் 7 விக்கெட்டுகளை இழந்து 71 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி 50 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

சென்பற்றிக்ஸ் அணியின் வீரர்கள் ஏ எம். நிமல்ராஜ், ஏ. ஐ. லெயலா ஆகியோர் தலா 15 ஓட்டங்களைப் பெற்றனர்.

சென் ஜோன்ஸ் அணி வீரர்கள் ரி சஞ்சீவன் 4 விக்கெட்டுகளையும், எஸ் உதயகுமார் 3 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து ஆடிய சென்ஜோன்ஸ் அணி ஒருகட்டத்தில் 4 விக்கெட்டுகளை இழந்து 2 ஓட்டங்களை மட்டும்பெற்றிருந்தது.

அதன்பின் ஆடிய என். ரகுராம் ரி. சதீசன் ஜோடி அபாரமான 57 ஓட்டங்களைப் பெற்றது.

நேற்றைய ஆட்ட முடிவில் இந்த அணி 7 விக்கெட்டுகளை இழந்து 71 ஓட்டங்களைப் பெற்றது.

என். ரகுராம் 39 ஓட்டங்களையும், ரி. சதீசன் 18 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஓ. வி. கே. எம். செந்தூர்வாசன், செல்வராஜா ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

இன்றைய இறுதி நாள் ஆட்டம் பகல் 12 மணிக்கு ஆரம்பமாகும். (ஒ-7)

## புதிய அணுகு . . .

[1-ம்பக்கத் தொடர்ச்சி]
யின் வேகம் குறையலாம் என்று கருதப்படுகின்றது

**ஜெயலலிதா செல்வாக்கு**

மூன்றாவது அம்சம் தமிழ்நாட்டில் செல்வி ஜெயலலிதா, மத்திய அரசு புலிகளுடன் பேச்சுக்களை நடத்த வேண்டும் என்று கோரி வருவதே

இந்திரா காங்கிரஸுடன் நெருங்கியதொடர்பு கொண்ட ஜெயலலிதாவின் வேண்டுகோளை புதுடில்லியால் புறக்கணிக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

இந்த அம்சங்கள்தான் புதுடில்லியின் அணுகுமுறையில் புதிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன என்று கூறப்படுகின்றது (அ-எ)

## நிலைமை . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)
ளுக்குள்ளேயே இருக்க வேண்டும் என்று இந்தியா இலங்கைக்குக் கூறிவிட்டது.

ஒப்பந்தப்படி இலங்கை இராணுவம் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முகாம்களுக்குள்ளேயே இருக்கவேண்டும். (அ-எ)

## நிவாரணம்---

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)
கிராமசேவகர்களே மேற்கொள்ள வேண்டும் என்று விதிமுறை இருந்தது.

கடந்த ஒரிரு தினங்களாக கிராமசேவகர்கள் கடமைக்குச் செல்லாததால் இந் நிவாரணம் பெறுவோர் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகி உள்ளனர்.

இதன் காரணமாகவே இப்படி புதிய முறை நடைமுறைக்கு வந்துள்ளது (ஒ-9)

## அச்சக உரிமையாளர்களுக்கு
## ஓர் அறிவித்தல்

யாழ்ப்பாண அச்சகர்கள் சங்கம் ஒன்று அமைக்கும் நோக்குடன் 12-03-1988 சனிக்கிழமை பி.ப. 2-00 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் ஓர் ஆரம்பக் கூட்டம் நடைபெறவுள்ளது. யாழ். குடாநாட்டில் உள்ள சகல அச்சக உரிமையாளர்களையும் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவரை இக்கூட்டத்திற்கு அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

அழைப்பாளர்கள்

## கம்பியூட்டர் கல்வி
COMPUTER PROGRAMMING
IN BASIC LANGUAGE

- வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் வேலை வாய்ப்பினைப் பெறுவதற்கான கம்பியூட்டர் பயிற்சி
- பல்கலைக்கழக அனுமதி பெற்ற பல்கலைக்கழக மாணவர்களுக்கான பிரத்தியேக கம்பியூட்டர் பயிற்சி வகுப்புகள் ஆரம்பம் ஆகின்றன.

ஆரம்பம்: 11-03-1988 பயிற்சிக்காலம்: 40 நாள்
கட்டணம் 750/- மாத்திரம்
(இருபிரிவுகளாகச் செலுத்தலாம்)
O/L படித்த இருபாலாரும் சேரலாம்.
பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

- குறிக்கப்பட்ட மாணவ மாணவிகளே சேர்க்கப்படுவார்கள் அதலால் நேரில் வந்து விண்ணப்பப் பத்திரத்தைப் பெற்றுப் பதிவு செய்யவும்

UNIKCO
COMPUTER CENTRE
No. 5, மின்சார நிலைய வீதி, 2 ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
(உபதபால் கந்தோர் அருகாமை)

## நீத்தார் பட்டியல்

### திருமதி சிவபாக்கியம் நடராஜா

சிறைச்சாலைத்தொழில் இலாகா, பரமேலைப் பகுதி மேற்பார்வையாளராகக் கடமையாற்றி இளைப்பாறிய திருநெல்வேலி கிழக்கைச் சேர்ந்த அப்பாக்குட்டி, இலட்சுமிப்பிள்ளையின் மகன் நடராஜாவினது அன்பு மனைவியும், புத்தூர் கிழக்கைச்சேர்ந்த செல்லப்பா – செல்லமுத்துவின் அருந்தவப் புதல்வியும், திரு நல்லைநாதனின் அன்புச் சகோதரியுமாகிய திருமதி ந. சிவபாக்கியம் 4.3.88ல் காலமானார். அன்னார் கனடாவைச் சேர்ந்த மகேந்திரராஜா, ராணி ராஜேஸ்வரி, புஷ்பராணி, செல்வேந்திரராஜா, கமலராணி, சிறீஸ்கந்தராசா, பத்மராணி ஆகியோரதும், சறுப்பையா இராசம்மா (கொழும்பு), நவரட்ணராஜா, குலசிங்கம் (சவூதி), கமலாதேவி, செல்வமதி, தவேந்திரராஜா, ராஜேஸ்வரன், பத்மாவதி, பரமேஸ்வரி ஆகியோரின் சிறியதாயாரும் நல்லைநாதன் ஸ்ரீதரனின் அன்பு மாமியாரும், ஈஸ்வரி அம்மா நல்லைநாதனின் அன்பு மைத்துனியுமாவார். அன்னாரின் ஈமச்சடங்குகள் 5-3-88ல் புத்தூர் கிழக்கில் நடைபெற்றது இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நன்றி

தகவல்:
திரு சி அ நடராஜா,
'சிவராஜபதி' புத்தூர் கிழக்கு,
புத்தூர்

[1650]

### திருமதி அருள்மணி சச்சிதானந்தம் (வதனி)

தோற்றம்:- 16-11-59 மறைவு:- 06-03-88

திருமதி அருள்மணி சச்சிதானந்தம் காலமானார். அன்னார் உடுப்பிட்டி அப்பாச்சாமி சச்சிதானந்தத்தின் அருமை மனைவியும் நுணாவில் திரு பரமசாமி தம்பதியின் அருமை மகளும் உடுப்பிட்டி பரமராஜா ரேடிங் கம்பெனி கணபதிப்பிள்ளையின் அருமைப் பேத்தியும் திருமதி சாந்தநாயகி நகுலேஸ்வரன், (ஆசிரியை, இயக்கச்சி அ. த. க. பாடசாலை) திருமதி செல்வமணி தர்மேந்திரன், (பனம் பொருள் அபிவிருத்திச் சபை, கச்சேரி) தர்மேந்திரன், கிரிஜா, ஜெயேந்திரன், சிவனேந்திரன் ஆகியோரின் அருமைச் சகோதரியும், நகுலேஸ்வரன் (யாழ்ப்பாண வளாகம்) தர்மேந்திரன், சர்வேஸ்வரி ஆகியோரின் அருமை மைத்துனியுமாவார் அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை பகல் 11 மணியளவில் நுணாவிலில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
க. பரமசாமி
நுணாவில்.

(2003.)

### இராமலிங்கம் சுப்பிரமணியம்

இராமலிங்கம் சுப்பிரமணியம் (உடுப்பிட்டி செல்லப்பா) Retired Store keeper food contral Dept வயது 83 சுழிபுரம் வாசி 5-3-88இல் சுன்னாகத்தில் காலமானார். இவர் வள்ளியம்மையின் அன்புக் கணவரும் ஞானம்பிகை (காலஞ்சென்ற ஆசிரியர்) சந்தசாமி (தொலைத்தொடர்பு பரிசோதகர் Doha) சண்முகரட்ணம் (பத்திரிகை ஏஜென்சி அச்சுவேலி) பரமேஸ்வரன் (போமன் - இலங்கைக் கடற்படை) சண்முகதாசன் (எஞ்சினியர் தொலைத்தொடர்பு Abudhabi) நவநீதமணி ((இலிகிதர் - தொலைத்தொடர்பு) ஆகியோரின் அன்புத்தந்தையும், கந்தையா (Store keeper காலஞ் சென்றவர்) தியாகராசா போக்குவரத்து அதிகாரி (காலஞ்சென்றவர் சீமெந்துக் கூட்டுத்தாபனம் காங்கேசன்துறை), சரோஜினிதேவி, இராஜேஸ்வரி (ஆசிரிய ஆலோசகர்), சொர்ணாம்பிகை, தனலட்சுமி, இரத்தினைந்தன் லிகிதர் குருசாமி & (O) ஆகியோரின் அன்பு மாமனாரும் தேவராசா, புஸ்பராணி (கனடா) கணேசமூர்த்தி (இந்தியா) லிங்கேஸ்வரி, மகேந்திரராசா, சாந்தா, பாலச்சந்திரன், வசந்தா (ஊர்), ஜெயந்தி (ஜேர்மனி), தேவகிதேவி, சுபத்திரா (Doh), பாலமுருகன், நாதசொருபன், நாகவேணி, சசிகலா, மிருவினி, பிரசாந்தி, சுலோஜனா (Abudhabi) அருட்குகன், இந்துசா ஆகியோரின் அன்புப்பேரனும், சாலினி (கனடா) டினேஸ் (ஜேர்மனி) ஆகியோரின் பூட்டனுரும் ஆவர்,

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 6-3-88ல் சுன்னாகத்தில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்: சு சண்முகரத்தினம்,
நியூஸ் ஏஜென்ட், அச்சுவேலி.

## நீத்தார் பட்டியல்

### ஏனி சூசைப்பிள்ளை

கரம்பொன் பாலாவி வீதியைச் சேர்ந்த ஏனி சூசைப்பிள்ளை காலமானார். அன்னார் முத்துசிசீலியாவின் அன்புக் கணவரும் இம்மனுவேல், யோசப், மகேந்திரன் (பிரான்ஸ்) யேசுதாசன், பாலா (ரூபினி ரெக்ஸ்ரயில்ஸ் கொழும்பு) ஈஸ்வரி, எவஞ்சலினா, றென்ரன், சுரேஸ் (பிரான்ஸ்) அவர்களின் அன்புத் தந்தையும் கிளிநொச்சி லக்கி ஸ்ரோர்ஸ் உரிமையாளர் யோண் அமிர்தநாயகம் நொயலின் பத்மினி கிளி அவர்களின் அன்பு மாமனாரும் லெனிற், வினுட், சுனித்திரா, தினகன், றூபல், இருபா, சரோஜினி, பிரவின்த். விஜேஷ், லிலுக்சனா ஆகியோரின் பேரனுமாவார், அன்னாரின் பூதவுடல் 9-3-88 நாளை புதன்கிழமை காலை 8 மணிக்கு ஊர்காவற்றுறை புனித மரியாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்

தகவல் :
B. J. அமிர்தநாயகம்

லக்கி ஸ்ரோர்ஸ்,
கிளிநொச்சி

### பொன்னையா சுப்பிரமணியம்

அராலி தெற்கைச் சேர்ந்த பொன்னையா சுப்பிரமணியம் 16 2 88 அன்று அகால மரணமடைந்து விட்டார். இவர் இளைப்பாறிய பொலீஸ் சார்ஜன் பொன்னையா அவர்களின் ஏகபுத்திரனும் நாகபூஷணியின் அன்புக் கணவரும் வரதராஜா, ரஞ்சன், தாசன், மாலா, சேகர் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்,

அராலி தெற்கு,
அராலி.

(1848)

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



நடராசா தயாநாதன்

தோற்றம்: 01-10-1962
பிரான்ஸில் அகால மரணம்: 24-01-1988

எங்களை எல்லாம் ஆருத் துயரில் ஆழ்த்தி விட்டு திடீரென மறைந்த எங்கள் அன்புச் செல்வமே! காலன் உனக்குக் காலனாக வந்ததோ! எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்வாய் என்று நினைத்தோமே! நின் கனிமுகம் காணாது நாள் தோறும் ஏங்கியேங்கித் தவிக்கின்றோமே!

உமது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கும்
ஐயா, அம்மா,
சகோதரர்கள், சகோதரிகள்,
உற்றார், உறவினர்.

புத்தூர் கிழக்கு,
புத்தூர்.

(1856)

## ஓர் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில் 24-02-71
தாயகத்தின் மண்ணில் 08 03-87

லி. சிவசங்கர் ஸ்டாலின்

பாராளும் பாவியர் பண்பு கெட்ட துன்மதியர் போராடச் சென்ற உன்னை போராடச் சக்தியற்று மாய்த்தனரோ உன்னுயிரை!

தமிழீழ மண்ணிலே கூலிப்படையினரின் குண்டுக்கே இலக்கானாய்! மறைந்ததையா உன் உடம்பு பிறந்தநதையா புதுமுடம்பு உற்றார், உறவினர், நண்பர்கள் இந்நாளை நினைவு கூருகின்றனர்.

இங்ஙனம்
தந்தை, தாய்,
சகோதரர், சகோதரிகள்

பொலிகண்டி
வல்வெட்டித்துறை.

(1850)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 08 03-1988ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd. 292/2 Navalar Road, Jaffna on Tuesday, 8th March 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org